# தனிக்குடும்பத் தலைமைகளின் பொருளாதாரத்தை நிலைநிறுத்தலும் நல்வாழ்வும் தொடர்பான செயற்திட்டம்.

## தனிக்குடும்பத் தலைமைக் குடும்பங்களின் நிலை தொடர்பான ஆய்வு

தெல்லிப்பளைப் பிரதேச செயலக பிரிவு

2021

வெளியீடு : நிதி அனுசரணை :

# நன்றி கூறுகின்றோம்.

தெல்லிப்பளை பிரதேச செயலாளர் திரு.ச.சிவஸ்ரீ அவர்களின் பொருத்தமான வழிகாட்டலுடன் 40 **தனிக்குடும்பத் தலைமைகளின் பொருளாதாரத்தை நிலைநிறுத்தலும் நல்வாழ்வும் செயற்திட்டம்** என்ற இத் திட்டம் செயற்படுத்தப்பட்ட நிலையில் இக்குடும்பங்களின் நிலை பற்றிய இவ் ஆய்வு தொகுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட தனிக் குடும்பத் தலைமைகளின் வாழ்வை மேம்படுத்த பிரதேச செயலரும் சம்பந்தப்பட்ட திணைக்கள உத்தியோகத்தர்களும் காட்டிய ஆர்வம் பாராட்டுக்குரியது.

குறிப்பாகப் பிரதேச செயலாளர் காட்டிய அக்கறை முக்கியமானது அவருக்கு எமது மனதார்ந்த நன்றிகளும் பாராட்டுகளும்.

இவ்வாறு எல்லாப் பிரதேசங்களிலும் இத்தகைய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் செயற்பட்டால் மக்கள் வாழ்வு மேலோங்கும்.

## என் கருத்து

இந்த செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக அண்மையில் நான் பல்வேறு கிராமங்களில் பாதிக்கப்பட்ட, நலிவுற்ற குடும்பங்களைப் பார்வையிடச் சென்றேன். அப்பொழுது என் மனதில் எழுந்த ஆதங்கம், வளர்ச்சியடைந்த நாகரீக சமூகத்தில் வாழுகின்ற நாம், இத்தகைய அவல நிலையில் அடிப்படை வசதிகள் குறைநிலையில் வாழுகின்ற குடும்பங்களைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்கின்றோம் என்பதாகும். இந்த நிலமைக்கு நாம் அனைவரும் பொறுப்புக் கூற வேண்டும். எம்மைச் சுற்றியுள்ள மக்கள் எப்படி வாழ்கின்றார்கள் அவர்களுக்கு என்னவிதமான உதவிகள் வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகளை நாங்கள் செய்யலாம் என்று சிந்தித்தாலே அவர்களுடைய வாழ்வில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

கோவில்கள் கட்டி திருவிழாக்கள் நடாத்தி, கும்பாபிசேகங்கள் செய்து கோபுரங்கள் கட்டி, காட்சிப்படுத்தி அலங்காரங்கள் செய்து, விழாக்கள் நடாத்தி, பாராட்டுவிழாக்கள் செய்து நாங்கள் எங்கள் வாழ்க்கையை மற்றவர்கள் நகைக்கும்படி ஆக்கிக்கொண்டிருக்கின்றோம். ‘‘ஜீவ சேவையே சிவ சேவை’’ என்று சுவாமி விவேகானந்தர் கூறினார்.

இறைவனால் படைக்கப்பட்ட உயிர்கள் அனைத்தையும் நன்றாக வாழ வைப்பது தான் நம் அனைவரும் செய்யக்கூடிய பெரிய புண்ணியமாகும். இங்கே ஆய்வுக்காக எடுக்கப்பட்ட குடும்பங்களைப் பார்க்கும் போது எங்களுக்கு இந்த எண்ணம் தான் வந்தது. இந்த மக்களுடைய வாழ்க்கையிலே உயர்வை ஏற்படுத்துவதற்கு எத்தனையோ அரசாங்க அதிகாரிகள் இருக்கிறார்கள், எத்தனையோ நிறுவனங்கள் இருக்கின்றன, எத்தனையோ சமூக அமைப்புக்கள் இருக்கின்றன. கிராமத்திலே உள்ள பெரியவர்கள், இளைஞர்கள், பல்வேறு குழுக்கள் இருக்கின்றது. ஆனாலும் இவர்களுடைய வாழ்க்கையும் அப்படியே தான் இருக்கின்றது. இவர்களுடைய வாழ்க்கையை நலம்பெறச் செய்வதற்கு நாம் அனைவரும் தீவிரமாகப் பணியாற்ற வேண்டும்.

ஒவ்வொரு பிரஜையும் சமூகப் பொறுப்புணர்வோடு செயற்பட்டால் இப்படியான மக்கள் எங்களிடையே இருக்க மாட்டார்கள். எல்லோரும் எல்லாமும் பெறுகின்ற ஒரு நிலமையை நாங்கள் எல்லோரும் இணைந்து உருவாக்க வேண்டும். இது தான் பிரார்த்தனை. இது தான் வழிபாடு. இது தான் ஆலயத்திற்குச் செய்கின்ற நேர்த்தியாக நாம் மனதிலே கொள்ள வேண்டும். அனைவரும் இணைந்து அனைவரையும் வாழ வைப்போம். நாமும் வாழ்ந்து மற்றவரையும் வாழ வைப்போம்.

நன்றி

ச.செந்துராசா
நிறைவேற்றுப் பணிப்பாளர்
SOND
E mail: senthu@eureka.lk
Mob: 077 331 4262

# உள்ளடக்கம்


ஆய்வின் நோக்கம் ........ 5
அறிமுகம் ........ 5
குடும்ப விபரங்கள் ........ 6
அடிப்படைத் தேவைகள்…… ........ 8
இதுவரை காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற உதவிகள் விபரம் ........ 10
தற்போது சமுர்த்தி உதவி பெறுபவர்கள் ........ 11
சமூகமட்ட அமைப்புக்களின் அங்கத்துவம் ........ 11
சட்ட ஆவணங்கள் ........ 11
தொழில் ........ 12
குடும்பத் தலைவிகள் மற்றும் இளைஞர் யுவதிகளின் தொழில் முயற்சிகள் ........ 16
சேமிப்பு ........ 16
சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகள் ........ 16
சிறுவர்களின் பாதுகாப்பு ........ 16
சுற்றுச் சூழல் ........ 17
குடும்பத் தலைவர் விபரம் ........ 17
சிறப்பாக உள்ள 2 குடும்பக் கதை ........ 18
கவலைக்குரிய நிலையிலுள்ள 2 குடும்பக் கதை ........ 18
பரிந்துரைகள் அல்லது முன்னேற்றப்பட வேண்டிய விடயங்கள் அல்லது அவர்களின் தேவைகள் ........ 19
சவால்கள் ........ 20
முடிவுரை: ........ 20
குடும்ப விபரத் திரட்டுப் பெறப்பட்டோர் விபரம். ........ 21
J/212 கிராம சேவகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் விபரம் ........ 21
J/213 கிராம சேவகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் விபரம் ........ 21
J/214 கிராம சேவகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் விபரம் ........ 22
J/219 கிராம சேவகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் விபரம் ........ 23
J/220 கிராம சேவகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் விபரம் ........ 23

## ஆய்வின் நோக்கம்

தனிக்குடும்பத் தலைமைகளைக் கொண்ட குடும்பங்கள் அன்றாட வாழ்க்கையை சிறப்பாக வாழ்வதற்காக பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளன.

அவ்வாறு பல நூறு குடும்பங்கள் இப் பிரதேச செயலகப் பிரிவில் இருக்கின்றபோதும் இவ் 46 குடும்பங்களின் நிலமைகள் மிகப் பாரதூரமான நிலைகளில் இவர்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமலும், உளரீதியாகப் பல்வேறு தாக்கங்களுக்கு ஆளாகி அவற்றிலிருந்து மீளத் தெரியாமலும், மீள முடியாமலும், சாதாரணமான சந்தோசமான வாழ்க்கையை வாழ முடியாமல் எந்த முன்னேற்றமும் இன்றி இருக்கிறார்கள் என்பதை அடையாளப்படுத்தி அதனை மேம்படுத்த நம்மாலான முயற்சிகளை எடுப்பதை இலகுவாக்குவதற்காக இவ் ஆய்வானது செய்யப்பட்டது.

சில விடயங்களை மக்கள் உணர்ந்து கொள்ளவும், உணர்ந்து கொள்ள முயற்சிக்க வைக்கவும் அதனூடாக சிறந்த பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது.

## அறிமுகம்


தெல்லிப்பளைப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 5 கிராம சேவகர் பிரிவுகளான J/220, J/219, J/214, J/213, J/212 என்பன பிரதேச செயலாளரினாலும், உதவித் திட்டமிடல் பணிப்பாளரினாலும் தெரிவுசெய்யப்பட்டு அக்கிராமங்களிலுள்ள 53 குடும்பங்கள் கிராம சேவகரால் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டது. 53 குடும்பங்களிலும் அவர்கள் வீடுகளுக்குச் சென்று குடும்ப விபரத் திரட்டு படிவம் நிரப்பப்பட்டு அவற்றில் பொருளாதார ரீதியாகவும் சமூக அந்தஸ்த்து அடிப்படையிலும் பாதிப்புற்ற நிலையில் உள்ள 46 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டது.

**46 குடும்பங்களும் தெரிவு செய்யப்பட்டமைக்கான நிபந்தனைகள்**

1. தனிக்குடும்பத் தலைமைகளாக பெண்களைக் கொண்ட குடும்பங்கள்.
2. வருமானம் குறைவான குடும்பங்கள்.
3. சராசரி வாழ்க்கையை நடத்தக் கூட வழிப்படுத்தல் தேவைப்படும் குடும்பங்கள்.
4. வாழ்க்கை முறையில் முன்னேற்றம் தேவைப்படும் குடும்பங்கள்.
5. உளநெருக்கீட்டில் வாழ்ந்து கொண்டிருப்போர்
6. ஆதரவற்று, உதவியற்று தனித்திருப்போர்.
7. எதிர்கால சிந்தனையின்றி இன்றைய பொழுதை கடந்தால் போதும் என எண்ணுபவர்கள்.
8. விசேட உதவி தேவைப்படுவோர்.

இவ் ஆய்விற்காக நாம் தனித்தனியாக வீடுகளுக்குச் சென்ற போது அவர்களின் கதைகளைக் கேட்டு மனமுருக வேதனைப்பட வேண்டிய நிலமை ஏற்பட்டிருந்தது. எந்த இலக்கும் இல்லாமல் மிகவும் மோசமான நிலையில் இப்படியும் வாழ்கின்றார்கள் என்பது கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது.

## குடும்ப விபரங்கள்




| | குடும்ப எண்ணிக்கை | அங்கத்தவர் எண்ணிக்கை |
|---|---|---|
| J/212 | 12 | 37 |
| J/213 | 8 | 18 |
| J/214 | 8 | 28 |
| J/219 | 10 | 33 |
| J/220 | 8 | 20 |
| மொத்தம் | 46 | 136 |

| வயதடிப்படையிலான விபரம் | | ஆண் | பெண் |
|---|---|---|---|
| 1-5 | 7 | 5 | 2 |
| 6-12 | 19 | 10 | 9 |
| 13-19 | 22 | 8 | 14 |
| 20-35 | 30 | 15 | 15 |
| 36-50 | 34 | 0 | 34 |
| 50க்கு மேல் | 24 | 3 | 21 |
| **மொத்தம்** | **136** | **41** | **95** |

- 34 குடும்பத் தலைவிகள் 36-50 வயதிற்கு உட்பட்டவர்களே.
- 10 குடும்பத் தலைவிகளுக்கு 50 வயதிற்கு மேல்.
- 1 குடும்பத் தலைவிக்கு 24 வயது. இவர் அப்பா, அம்மா இறந்ததன் பின் சகோதரர்களை பராமரித்து வருகின்றார்.

34 குடும்ப தலைவிகள் வயது 36- 50 உட்பட்டவர்கள் என கருத்தில் கொள்ளும் பொழுது இவர்கள் அனைவரும் வாழவேண்டிய வயதுக்குரியவர்கள். இவர்களுக்குரிய அடிப்படை வளங்கள், வசதிகள், தேவைகள் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே இவர்களும் வாழ்ந்து தங்கள் பிள்ளைகளையும் நல்ல முறையில் வாழவைக்க முடியும் என்பதை நாங்கள் கருத்தில் எடுக்க வேண்டும்.



மொத்த குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை - 136



ஆண் - 41



பெண் - 95

| | | | |
|---|---|---|---|
| மொத்த குடும்பம் | 46 | ஆண் | பெண் |
| மொத்த குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை | 136 | 41 | 95 |
| குழந்தைகள் (1-5வயது) | 7 | 5 | 2 |
| பாடசாலை செல்லும் சிறுவர்கள் (6-19) | 41 | 18 | 23 |
| இளைஞர் யுவதிகள் | 30 | 15 | 15 |
| 35 -50 வயது | 34 | 0 | 34 |
| வயதானவர்கள் (50 வயதிற்கு மேல்) | 24 | 3 | 21 |

மொத்த குடும்ப அங்கத்தவர்கள் 136 பேரில் 95 பெண்களும் 41 ஆண்களும் உள்ளனர். இக்குடும்பங்களில் ஒரு ஆணுக்கு 2 பெண்கள் வசித்து வருகிறார்கள். எனவே இவர்களின் நிலையில் இவர்களுக்கு குடும்ப தேவைகளை நிறைவு செய்வதில் இருக்கும் பொறுப்புக்களையும் வேலைச்சுமையையும் கருத்தில் எடுத்து நாங்கள் உதவி செய்து வழிகாட்டவேண்டிய தேவை உள்ளது. இக்குடும்பங்கள் பல்வேறு தொழிலை மேற்கொண்டாலும் ஒன்றிரண்டு குடும்பங்களைத் தவிர எந்த குடும்பங்களும் கௌரவமான குடும்ப வாழ்க்கையை வாழக்கூடிய அத்தியாவசியமான தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய வருமானம் ஈட்டவில்லை என்பதையும் அவர்கள் தமது வாழ்க்கையின் தேவையை நிறைவு செய்யக்கூடிய பொருளாதார வசதிகளைக் கொண்டு இருக்கவில்லை என்பதையும் காணக்கூடியதாக உள்ளது.


- கல்வி கற்கும் சிறுவர்கள் 41 பேர் உள்ளனர். இவர்களை ஒன்றிணைத்து ஒரு சிறுவர் கழகத்தை உருவாக்கி இவர்களின் ஆக்கங்களையும், திறன்களையும் வெளிக் கொண்டுவர முயற்சிசெய்தல் வேண்டும்.
- இளைஞர், யுவதிகள் 30 பேர் உள்ளனர். இவர்களை இணைத்து ஒரு இளைஞர் கழகத்தை உருவாக்குவதன் மூலம் இவர்களின் எதிர்கால வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும். பாலின அடிப்படையில் சராசரியாக 15 இளைஞர்களும், 15 யுவதிகளும் உள்ளனர்.

## <u>அடிப்படைத் தேவைகள்......</u>

### வீடு

| | |
|---|---|
| சொந்தமான கல்வீடு | 33 |
| வாடகை வீடு | 6 |
| வீடு அரைப்பாகம் முடிக்கப்பட்ட நிலை | 2 |
| மண்வீடு | 3 |
| முகாமில் வசிப்பவர்கள் | 1 |
| பெற்றோர் வீட்டில் வசிப்பவர்கள் | 1 |

1. J/212 இல் 10 குடும்பங்களுக்கு சொந்தமான கல்வீடு உள்ளது. 1 குடும்பம் வாடகை வீட்டில் வசிக்கின்றது. 1 வீடு அரைப்பாகம் கட்டப்பட்ட நிலையில் உள்ளது.
2. J/213 இல் 6 குடும்பங்களுக்கு சொந்தமான கல்வீடு உள்ளது. 2 குடும்பம் மண் வீட்டில் வசிக்கின்றது.
3. J/214 இல் 5 குடும்பங்களுக்கு சொந்தமான கல்வீடு உள்ளது. 2 குடும்பம் வாடகை வீட்டில் வசிக்கின்றது. 1 குடும்பம் கோணப்புலம் முகாமில் வசிக்கின்றது. முகாமில் வசிப்பவர்களுக்கு தற்போது அரசாங்கத்தினால் தையிட்டி தெற்கில் காணி வழங்கப்பட்டுள்ளது.
4. J/219 இல் 7 குடும்பங்களுக்கு சொந்தமான கல்வீடு உள்ளது. 1 குடும்பம் வாடகை வீட்டில் வசிக்கின்றது. 1 குடும்பம் தாய் வீட்டில் வசிக்கின்றனர். 1 வீடு அரைப்பாகம் கட்டப்பட்ட நிலையில் உள்ளது.
5. J/220 இல் 5 குடும்பங்களுக்கு சொந்தமான கல்வீடு உள்ளது. 2 குடும்பம் வாடகை வீட்டில் வசிக்கின்றது. 1 குடும்பம் மண் வீட்டில் வசிக்கின்றனர்.





| | |
|---|---|
| அரச வீட்டுத் திட்டம் கிடைக்கப்பெற்றோர் | 19 |
| அரச வீட்டுத் திட்டம் கிடைக்காதோர் | 27 |

1. J/212 இல் 7 குடும்பங்களுக்கு அரசினால் வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை. 4 குடும்பத்திற்கு வீட்டுத் திட்டம் கிடைத்துள்ளது. (2 குடும்பத்திற்கு காணி இல்லாமையால் வீட்டுத் திட்டம் கிடைக்கவில்லை. 1 வீடு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு குறையுடன் உள்ளது)
2. J/213 இல் 5 குடும்பங்களுக்கு அரசினால் வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை. 3 குடும்பத்திற்கு வீட்டுத் திட்டம் கிடைத்துள்ளது. (1 குடும்பத்திற்கு அரசினால் காணி வழங்கப்பட்டுள்ளது.)
3. J/214 இல் 5 குடும்பங்களுக்கு அரசினால் வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை. 3 குடும்பத்திற்கு வீட்டுத் திட்டம் கிடைத்துள்ளது. முகாமிலுள்ள குடும்பத்திற்கு தையிட்டியில் அரசினால் காணி வழங்கப்பட்டுள்ளது. 1 குடும்பத்திற்கு காணி இல்லாமையால் வீட்டுத் திட்டம் கிடைக்கவில்லை.
4. J/219 இல் 4 குடும்பங்களுக்கு அரசினால் வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை, 4 குடும்பங்களுக்கு அரசினால் வீட்டுத் திட்டம் கிடைத்துள்ளது. 1 குடும்பத்திற்கு காணி இல்லாமையால் வீட்டுத் திட்டம் கிடைக்கவில்லை. 1 வீடு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு குறையுடன் உள்ளது
5. J/220 இல் 3 குடும்பங்களுக்கு அரசினால் வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டது. 2 குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை, 2 குடும்பத்திற்கு காணி இல்லாமையால் வீட்டுத் திட்டம் கிடைக்கவில்லை. 1 குடும்பத்திற்கு அரசினால் காணி வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| அரச வீட்டுத்திட்டம் கிடைத்தும் வீடு பூர்த்தியாக்கப்படாதோர் | 2 |
| காணி இல்லாமையால் வீட்டுத் திட்டம் கிடைக்காதோர் | 5 |
| அரச காணி வழங்கப்பட்டோர். | 3 |

**மின்சாரம்** →

| மின்சாரவசதி | |
|---|---|
| ஆம் | 37 |
| இல்லை | 9 |




9 குடும்பங்களுக்கு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை நோக்காகக் கொண்டு இத் தேவை பூர்த்தி செய்யப்பட விழிப்புணர்வு வழிகாட்டல் வழங்க வேண்டும்.

குடி நீர்

| | |
|---|---|
| 1. வீட்டுக் கிணறு | 7 |
| 2. வீட்டுக் குழாய்க்கிணறு | 21 |
| 3. கோயில் கிணறு | 6 |
| 4. பொதுக்கிணறு | 4 |
| 5. அயல் வீட்டுக் கிணறு | 7 |
| 6. வயல் கிணற்றில் இருந்து | 1 |

1. J/212 இல் 3 குடும்பங்கள் அயல்வீட்டுக் கிணற்றில் இருந்து குடிநீரைப் பெறுகின்றனர். 1 குடும்பம் குழாய் நீரை தொலை தூரம் சென்று பெறுகின்றனர்.
2. J/213 இல் 2 குடும்பங்கள் அயல்வீட்டுக் கிணற்றில் இருந்து குடிநீரைப் பெறுகின்றனர். 2 குடும்பம் பொதுக் கிணற்றில் இருந்து குடிநீரைப் பெறுகின்றனர்.
3. J/214 இல் 1 குடும்பம் அயல்வீட்டுக் கிணற்றில் இருந்து குடிநீரைப் பெறுகின்றனர். 1 குடும்பம் கோவில் கிணற்றில் இருந்து குடிநீரைப் பெறுகின்றனர்.
4. J/219 இல் 5 குடும்பங்கள் அயல்வீட்டுக் கிணற்றில் இருந்து குடிநீரைப் பெறுகின்றனர். 1 குடும்பம் வயல் கிணற்றில் இருந்து குடிநீரைப் பெறுகின்றனர்.
5. J/220 இல் 1 குடும்பம் அயல்வீட்டுக் கிணற்றில் இருந்து குடிநீரைப் பெறுகின்றனர். 1 பொதுக் கிணற்றில் இருந்து குடிநீரைப் பெறுகின்றனர்.

மலசலகூடம்

| | |
|---|---|
| 1. ஆம் | 41 |
| 2. இல்லை | 1 |
| 3. பொது | 3 |
| 4. அயல் காணி | 1 |

1. J/212 இல் 1 வீட்டிற்கு மலசலகூட வசதி இல்லை எனத் தெரிவித்தனர். 1 குடும்பம் அயல் காணியைப் பயன்படுத்துவதாகக் குறிப்பிட்டனர். 2 குடும்பங்களில் பெண் அங்கத்தவர்களே உள்ளனர். ஆயினும் அத்தியவசியத் தேவை இவர்களுக்கு பூர்த்தியாக்கப்படவில்லை, ஒரு குடும்பத்தில் மன வளர்ச்சி குன்றிய மகள் ஒருவரும் உள்ளார்.
2. J/213 இல் 2 வீட்டிற்கு மலசலகூட வசதிகள் இல்லை. இவர்கள் நீதவான் நலன்புரி நிலையத்தில் உள்ளனர். எனவே பொது மலசலகூடத்தைப் பயின்படுத்துவதாகக் குறிப்பிட்டனர்.
3. J/214 இல் 1 வீட்டிற்கு மலசலகூட வசதி இல்லை. பொது மலசலகூடத்தைப் பயன்படுத்துகின்றனர்.


## <u>இதுவரை காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற உதவிகள் விபரம்.</u>

- அரசாங்கத்தினால்/ வேறு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உதவிகள் விபரம் வினாக் கொத்தில் கேட்கப்பட்டிருந்த போதும் போதுமான பதில்கள் எமக்கு கிடைக்கவில்லை. இவர்களுக்கு தாம் பெறும் நன்மைகள் எங்கிருந்து கிடைக்கின்றது, எப்படி பெறுமதியாகப் பயன்படுத்துவது என்பது தொடர்பான விழிப்புணர்வு அவசியமாகும்.
- சிலர் குறிப்பிட்ட போதிலும் பூரணமான தகவல்கள் அவர்களுக்குத் தெரியவில்லை.
- என்ன உதவிக்கு யாரை அணுக வேண்டும் எனும் விழிப்புணர்வு வழங்க வேண்டும்.

**தற்போது சமுர்த்தி உதவி பெறுபவர்கள்**

| | |
|---|---|
| சமுர்த்தி உதவி பெறுவோர் | 40 |
| சமுர்த்தி உதவி கிடைக்காதோர் | 6 |

J/212 இல் 3 குடும்பங்களுக்கும் (இதில் ஒருவருடைய மகள் மனநோயாளி என்பதால் இவருக்கு மாதாந்தம் 5000 ரூபா கிடைக்கின்றது), J/214 இல் 1 குடும்பத்திற்கும், J/219 இல் 1 குடும்பத்திற்கும் இக்குடும்பத் தலைவி சமுர்த்திக்குழுவில் சேர்ந்தால் பிணை நிற்க வேண்டும் என்பதால் தான் சமுர்த்தி உத்தியோகத்தர் கேட்டும் சமுர்த்தியை விரும்பவில்லை என்றார், J/220 இல் 1 குடும்பத்திற்கும் சமுர்த்தி உதவி கிடைக்கவில்லை.




**சமூகமட்ட அமைப்புக்களின் அங்கத்துவம்**

- 31 குடும்பத் தலைவிகள் சமுர்த்தி சங்க உறுப்பினர்களாக உள்ளனர்.
- 15 குடும்பத் தலைவிகள் எந்த சமூகமட்ட அமைப்பிலும் அங்கத்துவம் வகிக்கவில்லை. இவர்களையும் சமூகத்தில் இணைத்து இவ் அமைப்புக்களில் ஒரு உறுப்பினராகவேனும் இருக்க ஊக்குவிப்பதோடு இதனால் அவர்களுக்குக் கிடைக்கும் நன்மைகளை எடுத்து விளக்க வேண்டும்.

**சட்ட ஆவணங்கள்**


30 குடும்பங்களில் அடிப்படை சட்ட ஆவணங்கள் உள்ளன. ஏனைய 16 குடும்பங்களிலும் சட்ட ஆவணங்கள் இல்லை.

சட்ட ஆவணங்களின் முக்கியத்துவத்தை விளங்க வைப்பதுடன் அவற்றை எப்படிப் பெற்றுக் கொள்வது எனவும் வழிப்படுத்த வேண்டும்

## தொழில்

| | |
|---|---|
| தையல் | 7 |
| கோழி வளர்ப்பு | 10 |
| ஆடு வளர்ப்பு | 7 |
| கேக் ஐசிங் | 2 |
| சாப்பாடு செய்து விற்பது | 5 |
| கூலித் தொழில் | 10 |
| கடை | 6 |
| மேக்கப்- அலங்காரம். | 1 |
| பூங்கன்று வளர்த்து விற்பனை செய்தல் | 1 |
| சந்தையில் பழ வியாபாரம் | 1 |
| தூள் அரைப்பது. | 1 |
| முன்பள்ளி ஆசிரியர் | 1 |
| மகள் மாலைநேர வகுப்பு கொடுக்கிறார் | 1 |
| காவலாளி (Security) | 1 |
| பிரதேச செயலகத்தில் தூய்மைப்படுத்தும் பணி | 1 |
| மாடு வளர்ப்பு | 4 |
| முதியோர் பராமரிப்பு | 1 |
| லோன்றி வருமானம் (தகப்பன்) | 1 |
| கணவரின் சகோதரர் உதவுகின்றார். | 1 |
| மகனின் உதவி | 1 |
| காப்புறுதி முகவராக தம்பி பணியாற்றும் வருமானம் | 1 |
| பான்சி கடையில் வேலை | 1 |
| மிக்ஷர் கம்பனியில் வேலை | 1 |

இன்றைய கால கட்டத்தில் ஒரு குடும்பம் பொருளாதார கஷ்டத்தில் வாழ்வது என்பது மிகவும் கவலைக்குரிய விடயம் அவர்களுக்கு இந்த விடயத்தில் வருமானம் அதிகரிப்பதற்கும் தேவை அற்ற செலவுகளை குறைத்துக் கொள்வதற்கு வழிமுறைகள் ஏற்படுத்தி கொடுக்கப்படவேண்டும். தொழில் முயற்சியைப் பொறுத்த மட்டில் இவர்களுக்கு பொருத்தமான தொழில் தெரிவு இல்லாமல் இருக்கிறது. அதிகமானவர்கள் கூலிவேலை செல்வதையே தமது வாய்ப்பாக கருதுகின்றார்கள். இவர்களின் உடல் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டால் கூலிவேலை என்பது இவர்களுக்கு மிகவும் கடினமான விடயமாக காணப்படுகிறது. இதனால் நோய்வாய்ப்படும் நிலைமை காணப்படுகிறது.




மொத்தமாக 23 தொழில்களில் ஈடுபடுகின்றனர். ஒரு சிலர் வருமானத்தை ஈட்டும் ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்களில் ஈடுபடுகின்றனர். அதேசமயம் சிலர் நோயாளிகளுக்காக அரசாங்கத்தால் கிடைக்கும் பணத்தையே தமது வருமானம் எனக் குறிப்பிட்டிருந்தனர்.

இவர்களை சுய தொழில் புரிய ஊக்கப்படுத்த வேண்டும்.

10 பேர் கூலித் தொழிலுக்குச் செல்லுகின்றனர். J/214 இலே 8 குடும்பங்களில் 4 குடும்பங்கள் கூலித் தொழிலில் மட்டும் தங்கியுள்ளனர். (வேறு எந்த வருமானத்தை ஈட்டும் முயற்சியிலும் ஈடுபடவில்லை தொழில் இல்லாத சந்தர்ப்பங்களில் இவர்களுக்கு பண நெருக்கடி ஏற்படும்)

| J212 | |
|---|---|
| தையல் | 2 |
| கோழி வளர்ப்பு | 3 |
| ஆடு வளர்ப்பு | 2 |
| கேக்ஜசிங் | 2 |
| சாப்பாடு செய்து விற்பது | 3 |
| கூலித் தொழில் | 2 |
| கடை | 2 |
| மேக்கப் | 1 |
| பூங்கன்று வளர்த்து விற்பனை செய்தல் | 1 |
| சந்தையில் பழ வியாபாரம் | 1 |

| J213 | |
|---|---|
| தையல் | 2 |
| கோழி வளர்ப்பு | 2 |

| | |
|---|---|
| ஆடு வளர்ப்பு | 1 |
| கூலித் தொழில் | 1 |
| கடை | 2 |
| தூள் அரைப்பது. | 1 |
| முன்பள்ளி ஆசிரியர் | 1 |
| மகள் மாலைநேர வகுப்பு கொடுக்கிறார் | 1 |

| J214 | |
|---|---|
| தையல் | 1 |
| கோழி வளர்ப்பு | 4 |
| கூலித் தொழில் | 4 |
| கடை | 1 |
| காவலாளி (Security) | 1 |
| பிரதேச செயலகத்தில் தூய்மைப்படுத்தும் பணி | 1 |
| மாடு வளர்ப்பு | 2 |

| J219 | |
|---|---|
| கோழி வளர்ப்பு | 1 |
| ஆடு வளர்ப்பு | 1 |
| சாப்பாடு செய்து விற்பது | 1 |
| கூலித் தொழில் | 2 |
| கடை | 1 |
| மாடு வளர்ப்பு | 1 |
| முதியோர் பராமரிப்பு மூலம் 3000 | 1 |
| லோன்றி வரமானம் (தகப்பன்) | 1 |
| கணவரின் சகோதரர் உதவுகின்றார். | 1 |
| மகனின் உதவி | 1 |

| J220 | |
|---|---|
| தையல் | 2 |
| ஆடு வளர்ப்பு | 3 |
| சாப்பாடு செய்து விற்பது | 1 |
| கூலித் தொழில் | 1 |
| மாடு வளர்ப்பு | 1 |
| காப்புறுதிமுகவராக தம்பி பணியாற்றும் வருமானம் | 1 |
| பான்சி கடையில் வேலை | 1 |
| மிக்ஷர் கம்பனியில்வேலை | 1 |

## வருமானம் சகல கி. சே. பிரிவுகளிலும்

| | |
|---|---|
| Rs. 5,000.00 | 5 |
| Rs. 8,000.00 | 2 |
| Rs. 10,000.00 | 13 |
| Rs. 12,000.00 | 7 |
| Rs. 13,000.00 | 1 |
| Rs. 15,000.00 | 7 |
| Rs. 18,000.00 | 3 |
| Rs. 20,000.00 | 4 |
| Rs. 30,000.00 | 2 |
| Rs. 35,000.00 | 1 |

அனேக குடும்பங்களின் வருமானம சராசரியாக் 10,000 – 20,000 வரையான மாதாந்த வருமானம் பெறுகின்றவர்களாக உள்ளனர். கிராம ரீதியாகப் பார்க்கும் போது J/214 கிராம சேவகர் பிரிவு பொருளாதார ரீதியில் சிறப்பாக உள்ளது எனத் தெரிகின்றது.

| J/212 | |
|---|---|
| Rs. 5,000.00 | 2 |
| Rs. 10,000.00 | 2 |
| Rs. 12,000.00 | 3 |
| Rs. 15,000.00 | 2 |
| Rs. 20,000.00 | 1 |
| Rs. 30,000.00 | 1 |

| J/213 | |
|---|---|
| Rs. 8,000.00 | 2 |
| Rs. 10,000.00 | 5 |
| Rs. 20,000.00 | 1 |

| J/214 | |
|---|---|
| Rs. 5,000.00 | 2 |
| Rs. 12,000.00 | 1 |
| Rs. 13,000.00 | 1 |
| Rs. 15,000.00 | 1 |
| Rs. 20,000.00 | 1 |
| Rs. 30,000.00 | 1 |
| Rs. 35,000.00 | 1 |

| J/219 | |
|---|---|
| Rs. 5,000.00 | 1 |
| Rs. 10,000.00 | 5 |
| Rs. 15,000.00 | 2 |
| Rs. 18,000.00 | 1 |
| Rs. 20,000.00 | 1 |

| J/2020 | |
|---|---|
| Rs. 10,000.00 | 1 |
| Rs. 12,000.00 | 3 |
| Rs. 15,000.00 | 2 |
| Rs. 18,000.00 | 2 |

**<u>குடும்பத் தலைவிகள் மற்றும் இளைஞர் யுவதிகளின் தொழில் முயற்சிகள்</u>**

22 குடும்பத் தலைவிகள் தொழில் விஸ்தரிப்பிற்காகவும், வாழ்வாதார விருத்திக்காகவும் கடன் உதவி வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர்.

**<u>சேமிப்பு</u>**

21 குடும்பத் தலைவிகள் சேமிப்புப் பழக்கத்தைக் கொண்டுள்ளமை சிறப்பான விடயமே ஆயினும் இவர்கள் சமுர்த்தி கட்டாய சேமிப்பினையே செய்கின்றார்கள்.

அனைவருக்கும் அன்றாட செலவுகளிலிருந்து சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும்

**<u>சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகள்</u>**

- உங்களது குடும்பத்தில் பாடசாலை செல்லாத 14 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் உண்டா? என ஒரு வினா கேட்கப்பட்டது. 1 மனவளர்ச்சி குன்றிய பிள்ளையைத் தவிர அனைத்து (38) சிறுவர்களும் பாடசாலைக்குச் செல்கின்றனர். இது ஒரு வரவேற்கத்தக்க விடயமாக உள்ளது.
- குடும்பத் தலைவர் இல்லாத சூழ்நிலையிலும் தமது பிள்ளைகளை கஷ்ரப்பட்டு கல்வி கற்க வைக்கின்றார்கள் தாய்மார்கள்.
- ஆயினும் பிள்ளைகளின் பெறுபேறு குறைவாகவே உள்ளது. இவ்விடயத்தில் கவனமெடுக்கப்பட வேண்டும்.

**<u>சிறுவர்களின் பாதுகாப்பு</u>**

- 16 குடும்பங்களில் மட்டும் தாய் வெளியே செல்லும் போது பிள்ளைகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகிறது.

  இச் சமூகத்திற்கு சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு தேவை இதனால் சிறுவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் விழிப்புணர்வு வழங்கப்பட வேண்டும். சிறுவர் கழகங்கள் உருவாக்கப்பட்டு சிறுவர் மேம்பாடு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

## சுற்றுச் சூழல்


- அயலவர்களுடனான உறவு நிலை மிகவும் குறைவாக கவலைக்குரிய விடயமாக சில இடங்களில் உள்ளது. இதுவே சமூக அந்தஸ்த்தை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.
    1. J/212 இல் 1 குடும்பம் அயலவர்களுடனான உறவு நிலை சிறப்பாக இல்லை எனத் தெரிவித்தனர். 3 குடும்பம் அயலவர்களுடனான உறவு நிலை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.
    2. J/213 இல் 2 குடும்பங்கள் அயலவர்களுடனான உறவு நிலை சிறப்பாக இல்லை எனத் தெரிவித்தனர்.
    3. J/214 இல் 2 குடும்பங்கள் அயலவர்களுடன் முரண்பாடுகள் எனத் தெரிவித்தனர்.
    4. J/219 இல் 2 குடும்பங்கள் அயலவர்களுடனான உறவு நிலை சிறப்பாக இல்லை எனத் தெரிவித்தனர்.
    5. J/220 இல் 4 குடும்பங்கள் அயலவர்களுடனான உறவு நிலை சிறப்பாக உள்ளது எனத் தெரிவித்தனர்.

- அத்துடன் சில வீடுகளில் சுற்றுச் சூழல் தூய்மை குறைவாகக் காணப்படுகின்றது இதுவும் இவர்களின் சமூக அந்தஸ்தில் தாக்கம் செலுத்தும் என்பதை உணர்த்தி தூய்மையையும் சுகாதாரத்தையும் கடைப்பிடிக்க விழிப்புணர்வு வழங்கப்பட வேண்டும்.

## குடும்பத் தலைவர் விபரம்

| | |
|---|---|
| இறப்பு | 24 |
| பிரிவு | 15 |
| காணாமல் போன | 2 |
| திருமணமாகவில்லை | 5 |

1. J/212 இல் 7 குடும்பத் தலைவர்கள் இறந்துள்ளனர், 4 கணவன்மார் பிரிந்துள்ளனர், ஒருவர் திருமணமாகவில்லை அம்மாவுடன் வசிக்கின்றார்.
2. J/213 இல் 3 குடும்பத் தலைவர்கள் இறந்துள்ளனர், 2 கணவன்மார் பிரிந்துள்ளனர், 2 திருமணமாகவில்லை.
3. J/214 இல் 5 குடும்பத் தலைவர்கள் இறந்துள்ளனர், 3 கணவன்மார் பிரிந்துள்ளனர்
4. J/219 இல் 6 குடும்பத் தலைவர்கள் இறந்துள்ளனர், 3 கணவன்மார் பிரிந்துள்ளனர், ஒருவர் காணமல்போயுள்ளார்.
5. J/220 இல் 3 குடும்பத் தலைவர்கள் இறந்துள்ளனர், 3 கணவன்மார் பிரிந்துள்ளனர், ஒருவர் காணமல்போயுள்ளார்.




இதில் சிலர் பல ஆண்டுகளுக்கு முன்னரே கணவரைப் பிரிந்தவர்கள், சிலர் மிக அண்மைக் காலங்களில் கணவரைப் பிரிந்தவர்களாகவும் உள்ளனர் ஆயினும் இரு தரப்பிரும் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளமை அவர்களுடன் கலந்துரையாடலின் போது தெளிவாகியது. இவ்வாறு மிக அதிகமாகப் பாதிக்கப்பட்ட பெண் தலைமைகளுக்கு ஒரு உளவளத் துணையாளரின் உதவியைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவை உள்ளது.

## <u>சிறப்பாக உள்ள 2 குடும்பக் கதை</u>

1. **J/213 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த யுலியஸ் அனிஸ்ரஸ்ராஜ் செல்வமலர்.**

இவர் நீதவான் நலன்புரி மையம் எனும் முகாமில் வசிக்கிறார். இவருக்கு ஒரு ஆண்பிள்ளையும் ஒரு பெண்பிள்ளையும் இருக்கிறார்கள். மகன் திருமணமாகி ஒரு ஆண்பிள்ளை இருக்கிறது. அவர் கூலி வேலை செய்பவர். அவரும் தாயுடன் இருக்கிறார். **மகள் பல்கலைக்கழக அனுமதி பெற்றிருக்கிறார். முகாமில் இருந்து கொண்டு கணவன் காணாமல் போனநிலையிலும் தனது மகளை படிக்கவைத்து பல்கலைக்கழகம் அனுப்பியுள்ளார்.** இப்போது அரசாங்கத்தினால் காணி வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வீட்டுத்திட்டம் வழங்கப்படும். அன்றாட வாழ்க்கையை நடாத்த வீட்டில் சிறிய கடை ஒன்று நடத்துகிறார்.

2. **J/219 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த பராசக்தி. விஸ்வநாதன்.**

இவர் அடுவம்பற்று அளவெட்டி தெற்கில் வசிக்கிறார். ஒரு ஆண்பிள்ளை அவர் கடையில் வேலைசெய்கிறார். **இரண்டாவது மகள் பல்கலைக்கழகத்தில் இரண்டாம் வருடத்தில் கல்வி கற்கின்றார். மூன்றாவது மகள் இந்த வருடம் O/L பரிட்சை எழுதியுள்ளார்.** கணவர் இறந்துவிட்டார். வீட்டில் கோழி வளர்த்து முட்டைகளை விற்றும், இடிப்பம் அவித்து விற்றும், கூலிவேலைக்கு சென்றும் தனது பிள்ளைகளை வளர்த்திருக்கிறார்.

## <u>கவலைக்குரிய நிலையிலுள்ள 2 குடும்பக் கதை</u>

1. **J/219 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த நிசாந்தினி சதீஸ்குமார்.**

இவர் மாரியம்மன் கோவிலடி, அளவெட்டி தெற்கில் வசிக்கிறார். மகள் ஆடைத்தொழிற்சாலையில் வேலை பழகுகிறார், மகன் வீட்டில் சும்மா இருந்து நண்பர்களுடன் சேர்ந்து தேவையற்ற பழக்கங்களுக்கு அடிமையாகியிருக்கிறார். மகள் பாடசாலையில் 10ஆம் தரம் படிக்கிறார். கூலி

வேலைக்கு சென்று குடும்பத்தை பார்க்கிறார். எந்த முன்னேற்றமும் இல்லை முன்னேற முயற்சியும் எடுக்கவில்லை. அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உதவிகளை கூட சரியான முறையில் பயன்படுத்தவில்லை.

2. **J/212 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த மகாலக்ஹ்மணன் கம்சாநிதி**

இவர் காளிகோவிலடி மல்லாகம் எனும் முகவரியில் சகோதரியின் வீட்டில் வசித்துவருகின்றார். இவர்களுக்கு வீடு இல்லை. அத்துடன் கிணறு, மலசலகூடம் என்பனவற்றிற்கு அயல்காணியையே பயன்படுத்துகின்றார்கள். இவருக்கு 19 வயதுடைய மனவளர்ச்சி குன்றிய மகள் ஒருவர் இருக்கின்றார். அவர் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் மாதாந்த மருத்துவ உதவி பெற்றுவருகின்றார். இப்படியான மகளை வைத்துக் கொண்டு அடிப்படை வசதி கூட இல்லாமல் இருப்பதே கவலைக்குரிய விடயமாகும். 22 வயதுடைய மகன் தனியார் நிறுவனம் ஒன்றில் தொடர்பாடல் தொழில்நுட்பக் கற்கை பயின்றுவருகின்றார். 16 வயதுடைய மற்றைய மகன் 11 ஆம் தரத்தில் படிக்கின்றார். இவர்கள் வீட்டில் வைத்து ஓடரிற்கு சிற்றுண்டிகள் செய்து வழங்குகின்றனர். இதன் மூலமே இவர்களுக்கு வருமானம் கிடைக்கின்றது. ஆயினும் கொரோணாக் காலத்தில் ஓடர் எதுவும் வரவில்லை வருமானம் இல்லை எனத் தெரிவித்தனர். அத்துடன் ஒரு ஆடும் வளக்கின்றனர்.

## <u>பரிந்துரைகள் அல்லது முன்னேற்றப்பட வேண்டிய விடயங்கள் அல்லது அவர்களின் தேவைகள்</u>

1. ஏன் மின்சாரம் கிடைக்கவில்லை என ஆராய்ந்து மின்சார இணைப்பை பெறுவதற்கு விழிப்புணர்வு வழங்க வேண்டும். ஏனையோருக்கு சிக்கனமான மின்சாரப் பாவனை தொடர்பாக விழிப்புணர்வு வழங்க வேண்டும்.
2. 2 குடும்பங்களில் அத்தியவசியத் தேவையாகிய மலசலகூடவசதி பூர்த்திசெய்யப்பட வேண்டும். (2 குடும்பங்களிலும் பெண் அங்கத்தவர்களே உள்ளனர்)
3. என்ன உதவிக்கு யாரை அணுக வேண்டும் எனும் விழிப்புணர்வு வழங்க வேண்டும்.
4. இவர்களையும் சமூகத்தில் இணைத்து சமூகமட்ட அமைப்புக்களில் ஒரு உறுப்பினராகவேனும் இருக்க ஊக்குவிப்பதோடு இதனால் அவர்களுக்குக் கிடைக்கும் நன்மைகளை எடுத்து விளக்க வேண்டும்.
5. சட்ட ஆவணங்களின் முக்கியத்துவத்தை விளங்க வைப்பதுடன் அவற்றை எப்படிப் பெற்றுக் கொள்வது எனவும் வழிப்படுத்த வேண்டும்.
6. சுய தொழில் புரிய ஊக்கப்படுத்த வேண்டும். குறிப்பாக கூலித் தொழிலுக்கு செல்பவர்களை சுய தொழில் செய்ய ஊக்கப்படுத்த வேண்டும்.
7. தொழில் விஸ்தரிப்பிற்காகவும், வாழ்வாதார விருத்திக்காகவும் கடன் உதவி வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். இதற்கான கடன் வழங்குனர்களை (Banks) இவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.
8. அனைவருக்கும் அன்றாட செலவுகளிலிருந்து சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும்.
9. 9 குடும்பங்களுக்கு மின்சார வசதி இல்லை. எனவே மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை நோக்காகக் கொண்டு இத் தேவை பூர்த்தி செய்யப்பட விழிப்புணர்வு வழிகாட்டல் வழங்க வேண்டும்.
10. சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு தேவை. இதனால் சிறுவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் விழிப்புணர்வு வழங்கப்பட வேண்டும்.
11. தூய்மையையும் சுகாதாரத்தையும் கடைப்பிடிக்க விழிப்புணர்வு வழங்கப்பட வேண்டும்.
12. மிக அதிகமாகப் பாதிக்கப்பட்ட பெண் தலைமைகளுக்கு ஒரு உளவளத் துணையாளரின் உதவியைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவை உள்ளது.
13. 25 குடும்பத் தலைவிகளுக்கு தொற்றா நோய்கள் உள்ளன எனத் தெரிவித்தனர். இவர்களின் மறைவின் பின் பிள்ளைகளின் கண்காணிப்பிற்கு தகுந்த ஏற்பாடு செய்ய விழிப்புணர்வூட்ட வேண்டும்.
14. அரசாங்கத்தினால்/ வேறு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உதவிகள் விபரம் வினாக் கொத்தில் கேட்கப்பட்டிருந்த போதும் போதுமான பதில்கள் எமக்கு கிடைக்கவில்லை.

இவர்களுக்கு தாம் பெறும் நன்மைகள் எங்கிருந்து கிடைக்கின்றது, எப்படி பெறுமதியாகப் பயன்படுத்துவது என்பது தொடர்பான விழிப்புணர்வு அவசியமாகும்.

15. சிறுவர் கழகம், இளைஞர் கழகங்களை செயற்படுத்தி இவர்களின் திறமைகளை வெளிப்படுத்தி முன்னேற வைக்க வேண்டும்.
16. காணி அற்றவர்களுக்கு காணியைப் பெற முயற்சி செய்யும் வழியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.
17. சமுர்த்தியில் இணையாதவர்களை சமுர்த்தியில் இணைந்து பயன்பெற ஊக்கப்படுத்த வேண்டும்.
18. தொடர்ந்து அவர்களுடன் கதைத்து சிந்தனையை மாற்ற முயற்சிக்க வேண்டும். (சாதகமான சிந்தனைப் போக்கை உருவாக்க வேண்டும்)
19. போதைப் பொருள் பாவிப்பவர்கள் தொடர்பாக விசேட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
20. சுய ஊக்கமற்ற குடும்பங்களுக்கு உளவள வழிகாட்டல் செய்யப்பட வேண்டும்.
21. தொழில் ரீதியான வழிகாட்டலும் வழங்கப்பட வேண்டும்.
22. இருதய சிகிச்சை உட்பட மருத்துவ ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
23. பொருத்தமானவர்களை, பராமரிக்க முடியாதோரை சிறுவர், முதியோர் இல்லங்களில் சேர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## <u>சவால்கள்</u>

1. கோரோணா அச்சுறுத்தலால் நேரடியான பயிற்சிகளை வழங்கமுடியவில்லை.
2. வீட்டுத் தரிசிப்பின் அளவும் குறைவாக இருந்தது. (ஆனால் தொலைபேசி ஊடாக அவர்களுடன் கதைத்து பல்வேறு தகவல்கள் பெறப்பட்டு ஆலோசனையும் வழங்கப்பட்டது)
3. Zoom ஊடாகப் பயிற்சி வழங்கக் கேட்ட போது 18 குடும்பப் பெண்மணிகள் தமக்கு அந்த வசதியில்லையென மறுத்துவிட்டனர்.
4. எவ் விடயத்திலும் ஒத்துழைப்பு வழங்காத 4 குடும்பங்களை எமது தெரிவில் இருந்து நீக்கினோம்.
5. 17 குடும்பத்தலைவிகள் பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வம் இல்லாதவர்கள் என்பது எமது கருத்தாகும்.

## <u>முடிவுரை:</u>

பாதிக்கப்பட்ட இவர்களின் நிலைமையைக் கருத்தில் எடுக்க வேண்டும். ஒட்டுமொத்தமாகப் பார்க்கப்பட்டால் இந்த குடும்பங்களின் முன்னேற்றம் என்பது அரச உத்தியோகத்தராலும் சமூக சேவை அமைப்புகளினதும் சமூக ஆர்வலர்களின் கையில்தான் தங்கி இருக்கிறது. வளர்ச்சி பெற்ற சமூகத்தில் இத்தகைய மிகவும் கீழான நிலையில் இவர்கள் வாழ்வதையிட்டு நாம் அனைவரும் வெட்கப்பட வேண்டும்.

அனைவரும் இணைந்து இவர்களுக்கு போதுமான வழிகாட்டல்கள் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்து அவர்களுக்கு தேவையான உதவிகளை ஏற்பாடு செய்வது எமது கடமையாகும். அரசாங்கமானது பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருந்தாலும் போதுமான சேவைகளை மக்களுக்கு வழங்கி வருகிறது. இச் சேவைகளை பாதிக்கப்பட்ட மக்கள் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இவ்விடயத்தில் பிரதேச செயலர் மிகத்தீவிரமாக இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரின் கருத்துப்படி எங்களுடைய கடமை இவர்களுக்கான தேவை நிறைவு செய்வது என்பதும் அரசாங்க பணியாளர் நாம் அனைவரும் இணைந்தால் போதுமான திருப்தியான சேவைகளை ஓரளவுக்கு வழங்குவதற்கு முடியும் என கருத்து தெரிவித்து அரச உத்தியோகத்தர் அனைவரும் இவர்கள் விடயத்தில் கவனம் எடுத்து போதுமான வழிகாட்டல் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

## குடும்ப விபரத் திரட்டுப் பெறுப்பட்டோர் விபரம்.

## J/212 கிராம சேவகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் விபரம்

| இல | பெயர் | அங்கத்தவர் எண்ணிக்கை | ஆண் | பெண் | வசிப்பிட முகவரி | தே.அ.அ.இல | கிராம சேவகர் பிரிவு | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தில்லையம்பலம் மங்கையற்கரசி | 2 | 0 | 2 | கல்லாரை மல்லாகம் தெற்கு மல்லாகம் | 596702627v | J/212 | 0775964427 |
| 2 | அசோக்குமார் விசயா | 4 | 2 | 2 | கல்லாரை மல்லாகம் தெற்கு மல்லாகம் | 747683980v | J/212 | 0775964427 |
| 3 | சுவேந்திரன் ரஜனி | 5 | 2 | 3 | கல்லாரை மல்லாகம் தெற்கு மல்லாகம் | 806652784v | J/212 | 0769627829 |
| 4 | உதயகுமாரி சுவேந்திரன் | 2 | 0 | 2 | சிற்றம்பலம் வளவு மல்லாகம் தெற்கு மல்லாகம் | 776240574v | J/212 | 0779401447 |
| 5 | முருகையா நாகவதனா | 3 | 0 | 3 | நரியிட்டான்மல்லாகம் தெற்கு மல்லாகம் | 707293624v | J/212 | 0775237411 |
| 6 | பிரதீபன் சர்விதா | 3 | 2 | 1 | நரியிட்டான் மல்லாகம் தெற்கு மல்லாகம் | 19975267889 | J/212 | 0775267889 |
| 7 | பாஸ்கரன் ஜெயகௌரி | 3 | 0 | 3 | வயிரவகோயிலடி நரியிட்டான் மல்லாகம் தெற்கு மல்லாகம் | 767994273v | J/212 | 0760581976 |
| 8 | உதயகுமார் வாசுகி | 3 | 0 | 3 | வயிரவகோயிலடி நரியிட்டான் மல்லாகம் தெற்கு மல்லாகம் | 796614536v | J/212 | 0768924310 |
| 9 | குணரத்தினம் குணதேவி | 2 | 0 | 2 | வயிரவகோயிலடி நரியிட்டான் மல்லாகம் தெற்கு மல்லாகம் | 596853862V | J/212 | 0768924310 |
| 10 | செல்வராசா தயாநிதி | 2 | 0 | 2 | பாளிகோவிலடி மல்லாகம் | 756853430V | J/212 | 0776558387 |
| 11 | மகாலக்ஸ்மணன் கம்ஷாநிதி | 4 | 2 | 2 | காளிகோவிலடி, மல்லாகம் | 798604627V | J/212 | 0777464606 |
| 12 | ரஞ்சித்குமார் தபோதினி | 4 | 1 | 3 | கோவில் வீதி மல்லாகம் | 835465012V | J/212 | 0774942527 |

## J/213 கிராம சேவகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் விபரம்

| இல | பெயர் | அங்கத்தவர் எண்ணிக்கை | ஆ | பெ | வசிப்பிட முகவரி | தே.அ.அ.இல | கிராம சேவகர் பிரிவு | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பரமநாதன். சிவாநந்தினி. | 2 | 0 | 2 | கோவில் வீதி மல்லாகம். | 798404148V | J/213 | 776709493 |
| 2 | ஜெனிசன். சிவறஞ்சினி. | 4 | 3 | 1 | கோவில் வீதி மல்லாகம். | 847102098V | J/213 | 776841681 |
| 3 | குகநாதம். சுசிலாதேவி. | 2 | 0 | 2 | கோவில் வீதி மல்லாகம். | | J/213 | 762140737 |
| 4 | இராசா. சுசிதா. | 2 | 0 | 2 | காளிகோவிலடி மல்லாகம். | 19 8081200739 | J/213 | 764747104 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | தேவதாஸ். அற்புதமலர். | 4 | 2 | 2 | நீதிமன்ற வீதி மல்லாகம். | 547945867V | J/213 | 762305459 |
| 6 | யுலியஸ் அனிஸ்ரஸ்ராஜ். செல்வமலர். | 2 | 0 | 2 | நீதவான் முகாம் மல்லாகம். | 6974129221V | J/213 | 777374818 |
| 7 | விவ்சன்ற். சுமித்திரா. | 2 | 1 | 2 | நீதவான் நலன்புரிநிலையம் மல்லாகம். | 19 8372804457 | J/213 | 779820494 |
| 8 | கிருஸ்ணன். சுபத்திராதேவி. | 2 | 0 | 2 | கட்டுவான் வீதி மல்லாகம். | 19 7371402477 | J/213 | 772142765 |

**J/214 கிராம சேவகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் விபரம்**

| இல | பெயர் | அங்கத் தவர் எண் ணிக்கை | ஆ | பெ | வசிப்பிட முகவரி | தே.அ.அ.இல | கிராம சேவகர் பிரிவு | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | யோசோப்செல்வநாயகம் மேரிஜென்சி | 3 | 2 | 1 | குளமங்கால் ,மல்லாகம் | 845164665V | J/214 | 0768611886 |
| 2 | றமேஸ்வரன் சூரியகுமாரி | 4 | 1 | 3 | குளமங்கால் ,மல்லாகம் | 767264305V | J/214 | 0771881923 |
| 3 | கிரு'ணபாலன் பிரிண்டாகுமாரி | 6 | 3 | 3 | குளமங்கால் ,மல்லாகம் | 727072969V | J/214 | 0774152970 |
| 4 | மந்திரி ராசமணி | 3 | 0 | 3 | கோணப்புல முகாம் மல்லாகம் | 507593682V | J/214 | 0761546514 |
| 5 | பிறேமசீலன் காமினி அனிஸ்ரா | 4 | 2 | 2 | குளமங்கால் ,மல்லாகம் | 786433924V | J/214 | 0762354522 |
| 6 | தேவராசா மல்லிகாதேவி | 2 | | 2 | தையிட்டி கிழக்கு | 697624066V | J/214 | 0740140298 |
| 7 | மோகனராஜ் சுகுணாதேவி | 5 | 1 | 4 | காங்கேசன்துறை வடக்கு | 726334281V | J/214 | 0766115218 |
| 8 | கிருஸ்ணமேனன் யேராணி | 3 | 1 | 2 | நீதிமன்ற வீதி மல்லாகம் | 746224419V | J/214 | 0779260958 |

## J/219 கிராம சேவகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் விபரம்

| இல | பெயர் | அங்கத்தவர் எண்ணிக்கை | ஆண் | பெண் | வசிப்பிட முகவரி | தே.அ.அ.இல | கிராம சேவகர் பிரிவு | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | சிவகுமார் .பிறேமிலா | 7 | 4 | 3 | கலைநகர் மாரியம்மன் கோவிலடி அளவெட்டி, தெற்கு. | 827624683V | J/219 | 0769039642 |
| 2 | பராசக்தி விஸ்வநாதன் | 4 | 1 | 3 | அடுவம்பற்று, அளவெட்டி தெற்கு | 19676220419 | J/219 | 0771722535 |
| 3 | நிசாந்தினி சதீஸ்குமார் | 4 | 1 | 3 | மாரியம்மன் கோவலடி, அளவெட்டி தெற்கு அளவெட்டி | 805745029V | J/219 | 0779942704 |
| 4 | ஜெயதரன் சர்மிலா | 5 | 2 | 3 | ஆசிரியர் மணி செல்லையா வீதி, அளவெட்டி தெற்கு, அளவெட்டி | 918232222V | J/219 | 0767715426 |
| 5 | நந்தகுமார் ஜான்சி | 3 | 1 | 2 | அப்பாச்சிபிள்ளை வீதி, கலைநகர் அளவெட்டி தெற்கு அளவெட்டி | 906613662V | J/219 | 0762869106 |
| 6 | கலைவாணி கனகலிங்கம் | 4 | 1 | 3 | இளையதம்பி வதி, பெருமாங்கடவை அளவெட்டி தெற்கு அளவெட்டி | 758154092V | J/219 | 0765464059 |
| 7 | நிசாந்தன் வித்தியா | 4 | 1 | 3 | அருணோதயா பாடசாலைமுன், அளவெட்டி தெற்கு அளவெட்டி | 847464305V | J/219 | 0777814627 |
| 8 | சூரியகுமரன். சேல்வசெந்தி. | 2 | 1 | 1 | மலை வேம்படி அளவெட்டி தெற்கு | 655021515V | J/219 | 778341803 |
| 9 | தர்மரத்தினம். காந்திமதி. | 4 | 2 | 2 | அளவெட்டி தெற்கு | 766663966V | J/219 | 770569566 |
| 10 | திருச்செல்வி. ஈஸ்வரி. | 2 | 0 | 2 | மேலயப்புலம் அளவெட்டி தெற்கு | 597021887V | J/219 | 764474352 |

## J/220 கிராம சேவகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் விபரம்

| இல | பெயர் | அங்கத்தவர் எண்ணிக்கை | ஆ | பெ | வசிப்பிட முகவரி | தே.அ.அ.இல | கிராம சேவகர் பிரிவு | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கௌரிபாகன். குமுதினி. | 3 | 1 | 2 | நாற்கலாவத்தை அளவெட்டி மேற்கு. | 946104353V | J/220 | 771597396 |
| 2 | உதயகுமார் சந்திராணி | 2 | | 2 | தம்பளை அளவெட்டி மேற்கு, அளவெட்டி | 777564471V | J/220 | 0770308537 |
| 3 | ரஜனிகாந் வாசினி | 4 | 2 | 2 | தம்பலாவத்தை, அளவெட்டி மேற்கு, அளவெட்டி | 786894956V | J/220 | 077076723 |
| 4 | சுரெந்தன் சுஜீபா | 2 | 1 | 1 | காட்டுப்புலம் அளவெட்டி மேற்கு, அளவெட்டி | 825742379V | J/220 | 0779729459 |
| 5 | கிருஷ்ணகுமார் ஸ்ரீஸ்காந்தரூபி | 2 | 1 | 1 | தம்பளாவத்தை அளவெட்டி மேற்கு, அளவெட்டி | 197476802518 | J/220 | 0772137029 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | வரகுணன் மதிவதனி | 2 | 1 | 1 | விசவெட்டி, அளவெட்டி மேற்கு, அளவெட்டி | 838044719V | J/220 | 0778559437 |
| 7 | பாலசுப்பிரமணியம் | 3 | 2 | 1 | விசவெட்டி, அளவெட்டி மேற்கு, அளவெட்டி | 665944700V | J/220 | 0771480547 |
| 8 | நாகேஸ்வரன் கலைவாணி | 2 | 0 | 2 | சிவன்கோவிலடி அளவெட்டி மேற்கு, அளவெட்டி | 557754318V | J/220 | 764988711 |

**SOND நிறுவனம்**

**61, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

**கை பேசி :077 2242401**

**நன்றி.**